நிலக்கோட்டையில் தக்காளி பதனிடும் தொழிற்சாலை.

718—(*வினா எண். 9119) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதியில் வத்தலக்குண்டு பகுதியிலும் நிலக்கோட்டையிலும் அதிகமான தக்காளி உற்பத்தியாவதால் இங்கு தக்காளி பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: இல்லை.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே இல்லையென்று கூறிவிட்டார்கள். அந்தப் பகுதிகளில்—வத்தலகுண்டு, நிலக்கோட்டை பகுதிகளில் மிகவும் கஷ்டப்பட்டு தக்காளி உற்பத்தி செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால் அந்த விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் தக்காளி பதனிடும் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விவசாயம் மீது பாசம் இருக்கிறதோ இல்லையோ தக்காளி மீது அதிகமாகப் பாசம் இருக்கிறது. ஆகவே நாம் அங்கே தக்காளி பதனிடும் தொழிற்சாலையை உண்டாக்குகின்ற அளவுக்கு அந்த இடத்திலே தக்காளி பயிர் ஆகிறதா என்பதை சரிபார்த்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எற்றுக்கொள்ளப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற அத்தனை பேர்களுமே விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்திருக்கிறவர்கள்தான். ஆகையினால் விவசாய மக்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்படும் என்று கூறினார்கள். அந்தப் பகுதியில் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று உறுதியாகச் சொல்லி,

1986 மே 8]

இந்த ஆண்டே அந்தப் பகுதியில் தக்காளி பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்து அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நலனை ஏற்பட செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆராய்ந்து பார்க்காமல் முடிவு எடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி மிக வேகமாக ஆராய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கைகள் இந்த ஆண்டிலேயே எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்படும்.

குடவாசல் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி

(*வினா எண். 9254) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலைப் படிப்பில் ஆசிரியர் பயிற்சி பிரிவில் மாணவிகளை சேர்க்க ஒவ்வொரு வரிடமும் இப்பள்ளி தலைமை ஆசிரியையும் மற்றும் தனிநபர் ஒருவரும் ரூபாய் ஆயிரம் வீதம் கூடுதலாக ரூ. 40 ஆயிரம் வரை வசூல் செய்யப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இத்தகைய புகார் ஏதும் இது நாள்வரை மாணவிகளிடமிருந்தோ அல்லது தனி நபரிடமிருந்தோ பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான், சென்ற ஆண்டு என்னுடைய கோரிக்கையின் பேரிலே அந்த மக்களுக்கு இந்த ஆசிரியர் பயிற்சி தந்தார்கள். நானும் அந்த வளர்ச்சிக் குழு பொறுப்பிலே இருக்கிறேன். ஆனாலும் ஒவ்வொரு மாணவியரும் இப்படி அரசுக்கு தனியாக ஒரு பெட்டிஷனோ